




- வாழ்வோம்

# மன்னையின் சிங்கம்!
# மிசா கு.பாலகிருஷ்ணன்

ஓவியம் : ரவி பேலட்



**178 உடன்பிறப்பே**

**தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மிசா கு.பாலகிருஷ்ணன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.**

“மன்னார்குடியில் கழகக் கொடியை ஏற்றி, எத்தனையோ சோதனைக் காலங்களிலும், நெருக்கடி நிலைக் காலத்து ‘மிசா’ கொடுமைகளைத் தாங்கி நின்று, இறுதிமூச்சு வரை சுயமரியாதைக் கொள்கையோடும், மாறாத கழகப் பற்றோடும் வாழ்ந்த எனது அருமைத்தம்பி மன்னார்குடி ‘மிசா’ பாலகிருஷ்ணன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு. மன்னைப் பகுதியில் அன்போடு கு.பா என அழைக்கப்பட்டவர். தன் இளமைக் காலத்திலேயே அரசுப் பணியைத் துறந்து, பொதுவாழ்வில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட முன்னோடி.

1930-ஆம் ஆண்டு பிறந்தவர். இளங்கலை பட்டப்படிப்பு படித்ததும், கூட்டுறவுத் துறையில் பணிக்குச் சேர்ந்தார். 1948-ஆம் ஆண்டுவாக்கில், ‘திராவிட இளைஞர் குழு’வில் தொடங்கியது, அவரது பொது வாழ்வுப் பயணம். 1950-ஆம் ஆண்டு, மாணவர் தி.மு.க.வில் இணைந்து, தொடர்ந்து கழகப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டார். மன்னை நாராயணசாமி அவர்கள், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பணிகளைக் கவனித்துக்கொண்டார் என்றால், கு.பா, நகரக் கழகச் செயலாளராக வலம் வந்தார். 1954 முதல் 1959-ஆம் ஆண்டு வரை, மன்னார்குடி நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய அவர், தொடர்ந்து 1969-ஆம் ஆண்டு வரை வட்டக் கழகச் செயலாளராக இருந்து, மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கழக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

அந்தக் காலகட்டத்தில், மன்னார்குடியில் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக இருந்ததால், கிராமம் கிராமமாகத் தனது சைக்கிளிலேயே சென்று கழகப் பணியாற்றியவர். பேரறிஞர் அண்ணாவும் கலைஞரும் அவரது களப்பணியைப் பாராட்டும் அளவுக்கு, மன்னார்குடிப் பகுதியில் கழக அமைப்பை வலுப்படுத்தினார்.

“மன்னை நாராயணசாமி, மாவட்ட அளவில் ஒரு காரியத்தைத் திட்டமிட்டால், அதை மன்னார்குடியின் அடிமட்டத் தொண்டன் வரை கொண்டுசேர்க்கும் ‘செயல்வீரராக’ பாலகிருஷ்ணன் விளங்குகிறார்” என்று மேடைகளில் கலைஞர் பலமுறை பாராட்டிப் பேசியுள்ளார்.

1962-ஆம் ஆண்டு, ‘விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தில்’ பங்கேற்று, மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவித்தார். 1964-ஆம் ஆண்டு, ‘இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும்’ பங்கேற்றுச் சிறை சென்றவர். அதே ஆண்டில், மன்னார்குடி நகர்மன்றத்தின் முதல் தி.மு.க. உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் செல்வாக்கு செலுத்திய அந்த நகராட்சியின் ஒரே ஒரு தி.மு.க. உறுப்பினராக வென்று சாதனை படைத்தார்.

## சட்டமன்ற உறுப்பினர்

மன்னை சட்டமன்றத் தொகுதியில் கழகம் முதன்முதலாக வெற்றிபெற்ற வரலாற்றிலும் கு.பாலகிருஷ்ணனின் பெயர் இடம்பெற்றது. 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்று, மன்னையின் முதல் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றார். 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றினார். அதே காலகட்டத்தில், 1970-ஆம் ஆண்டு முதல் 1978-ஆம் ஆண்டு வரை கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலைக் காலத்தில், கழகத்தின்மீது ஏவப்பட்ட அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல், மன்னார்குடிப் பகுதியில் கழகத்தினரை ஒருங்கிணைத்து நின்றவர். ‘மிசா’ சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர், ஓராண்டு சிறைவாசத்தை அனுபவித்தார். “மன்னை நாராயணசாமியோடு இணைந்து, அஞ்சாமல் நின்று ‘மிசா’ சட்டத்தின் கீழ் சிறை சென்று கொடுமைகளை அனுபவித்த ‘மன்னையின் சிங்கம்’ கு.பாலகிருஷ்ணன்” என்று கு.பா அவர்களின் தியாக மனப்பான்மையைக் கலைஞர் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

## நிதிக்குழுப் பணி

1978-ஆம் ஆண்டு, கழகத்தின் சார்பில், திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநில மாநாட்டின் நிதிக்குழுவில் இடம்பெற்றுச் சிறப்புடன் செயலாற்றியவர். கு.ப.அவர்கள், கலைஞருடன் அவர் கொண்டிருந்த பற்றும் தனித்துவமானது. மன்னார்குடிக்கு கலைஞர் வரும்போதெல்லாம் கு.பாலகிருஷ்ணனின் இல்லத்திற்குச் செல்வதும் வழக்கமாக இருந்ததாகக் கழகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பொருளாளராகவும் பொறுப்பேற்று, மாவட்ட அளவில் கழக அமைப்பை வலுப்படுத்தினார். பின்னர், திருவாரூர் மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். 1969-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்தவர், மாவட்ட அளவில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் பொறுப்பேற்று, அவற்றை ஒழுங்குபடுத்தினார்.

தனது இறுதிக் காலங்களில்.. மாவட்டக் கழக அவைத் தலைவராக, இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த கு.பா அவர்கள், 2013-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 அன்று, வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். மன்னை கழகத்தினர், திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் கலங்கி நின்றபோது, அவர்களுக்கு ஆறுதல் அளித்து, இரங்கல் கடிதம் எழுதினார், முத்தமிழறிஞர் கலைஞர். “எத்தனையோ சோதனைக் காலங்களிலும், சுயமரியாதைக் கொள்கையோடும், கழகப் பற்றோடும் வாழ்ந்த எனது அருமைத்தம்பி மன்னார்குடி ‘மிசா’ பாலகிருஷ்ணன் அவர்களின் மறைவு, எனக்குப் பேரிழப்பாகும்” என்று குறிப்பிட்டார்.

“மன்னை மண்ணில் கழகக் கொடியை ஏற்றியவர். கிராமம் கிராமமாகச் சென்று கிளைக் கழகங்களை உருவாக்கியவர்” என்று அவரது பணிகளை நினைவுகூர்ந்தார், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். ஆண்டுகள் கடந்தாலும், கழகத்தினர் ‘மிசா’ கு.பா அவர்களின் நினைவு நாளில் கூடி, அவரது நெஞ்சுரத்தைப் போற்றுகின்றனர். ஆம், ‘மிசா’ என்பது அடையாளம் அல்ல. அது கழகத்தினர் கடந்துவந்த நெருக்கடிகளின் நினைவுச் சின்னம்.

**● நீரை.மகேந்திரன் ●**

## சென்னையில் சமூக நீதி நடைப்பயணம்!




தந்தை பெரியாரின் 148-வது பிறந்தநாளையொட்டி, அக்டோபர் 4-ஆம் தேதி, பெரியார் பிறந்தநாள் நடை/ ஓட்டம் நடைபெற உள்ளது. சமத்துவம், சுயமரியாதை, சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு சமூகத்தை உருவாக்கும் பெரியாரின் தொலைநோக்குப் பார்வையைச் செயலாக்கம் பெறச் செய்ய மக்களை ஒன்றிணைக்கும் வகையில், இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூக நீதி குறித்த உரையாடலை, உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஒரு பெரிய இயக்கத்தின் பகுதியாக நடைபெறும் இந்தப் பயணத்தில்.. நண்பர்கள், குடும்பத்தினர், நிறுவனங்களில் பணியாற்றுவோருடனும் அல்லது தனியாகவும் பங்கேற்கலாம். பெசன்ட் நகரில் உள்ள ஆல்காட் நினைவு மேல்நிலைப் பள்ளி அருகில் இருந்து, காலை 6 மணிக்கு தொடங்கும் இந்தப் பயணம், பெசன்ட் நகர் 4-ஆம் அவென்யூ, 6-ஆம் அவென்யூ, 5-ஆம் அவென்யூ வழியாகச் சென்று, மீண்டும் ஆல்காட் நினைவு மேல்நிலைப் பள்ளி அருகில் நிறைவடைகிறது.

மொத்த பயணத் தொலைவு 5 கி.மீ. ஆகும். பங்கேற்போருக்கு டி-ஷர்ட், பதக்கம், சான்றிதழ் வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு ரூ.300 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பங்கேற்க விரும்புவோர் HTTPS://PERIYARWALK.ORG/TA/CHENNAI என்ற இணையப் பக்கத்தில் முன்பதிவு செய்யலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதியிடம் ஆதரவு!



கே.வி.ராஜ்குமார்

2017-ஆம் ஆண்டு ஜூலை மாதம், சென்னை சேப்பாக்கத்தில், கரும்பு விவசாயிகளுக்கு நிலுவையில் இருந்த ரூ.2000 கோடி தொகையை வழங்கக் கோரி, தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில், எனது தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினோம். அதற்கு, கழகத்தின் ஆதரவு கேட்டு முத்தமிழறிஞர் கலைஞர், இன்றைய கழகத் தலைவர் தளபதி ஆகியோரை நேரில் சந்தித்து ஆதரவு கேட்டோம். அப்போது, கோபாலபுரத்தில் எடுத்த படம்.

**- கே.வி.ராஜ்குமார், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைவர், தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு, போளூர்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## தெரிந்து கொள்வோம்

- **1957** — தி.மு.கழகம் முதன்முறையாகத் தேர்தல் அரசியலில் களம் கண்டது.
- **1967** — சட்டமன்றத் தேர்தலில் 138 இடங்களில் வென்று, ஆட்சி அமைத்தது கழகம்.
- **1967** — ஜூலை 18-இல் `தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றினார் அண்ணா.
- **1968** — ஜன 23-இல் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையை உறுதி செய்யும் தீர்மானம்.
- **1968** — பேரறிஞர் அண்ணா தலைமையில், மாநில சுயாட்சி மாநாடு நடைபெற்றது.
- **1970** — அறநிலையத் துறைக்குத் தனி அமைச்சர், தனி வரவு-செலவுத் திட்டம் அறிமுகம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900